## விஜய்யின் போலி ‘ஜென் ஸீ’ புரட்சிக்கு முடிவு!


# உண்மையான இளைஞர் அரசியல் போராட்டம் ஆரம்பம்!

‘**வி**ஜய் ஒரு ஜென் ஸீ’ புரட்சியை நிகழ்த்தி விட்டார், இளைஞர்கள் எல்லாம் அவர் பின்னால் நிற்கிறார்கள்’ என்றெல்லாம் ஒரு மாயை தொடர்ந்து பரப்பப்பட்டது. ஊடகங்கள் மட்டுமல்ல, தங்களை அறிவு ஜீவிகள் என்று நம்பிய பலரும் இந்தப் பொய்க்குத் துணை போனார்கள். ஆனால் விஜய்க்கு வாக்களித்த இளைஞர்களின் நலனுக்காக முன்பும் சரி, இப்போதும் சரி; விஜய் ஒரு துரும்பைக்கூட கிள்ளிப்போட்டதில்லை என்பது மட்டுமல்ல, அந்த இளைஞர்களின் உரிமைப் போராட்டத்தைக் கொடூரமாக நசுக்கும் ஒரு அழிவு சக்தி த.வெ.க என்பதை கடந்த சில நாட்களாக நடக்கும் காட்சிகள் நமக்குக் காட்டுகின்றன.

‘ நீட்’ வினாத்தாள் கசிவிற்கு எதிராக டெல்லியில் தொடங்கிய போராட்டம் இன்று ‘ நீட்’ டை ஒழித்துக் கட்டும் போராட்டமாக நாடெங்கும் மாணவர்களாலும் இளைஞர்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தி.மு.க தான் ‘ நீட்’ அமல்படுத்தப்பட்ட நாளிலிருந்து அதை எதிர்த்து கடும் போராட்டத்தை நடத்தி வந்திருக்கிறது. இன்று அந்தப் போராட்டம் தேசிய அளவிலான பெரும் நெருப்பாக மாறியிருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் மாணவர்களும் இளைஞர்களும் போராடுகிறார்கள். தமிழ் நாட்டிலும் இந்தப் போராட்டம் வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்திற்கு தி.மு,க தனது முழு ஆதரவை வழங்கி வருகிறது. டெல்லியில் போராட்டக் களத்திலும் நாடாளுமன்றத்திலும் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ’ நீட்’டை எதிர்த்தும் மாணவர் போராட்டத்தை ஆதரித்தும் நீதியின் பக்கம் நிற்கிறார்கள். தமிழ்நாட்டிலும் போராட்டம் நடக்கும் இடங்களுக்கு கழக முன்னணியினர் சென்று தங்கள் ஆதரவை நல்குகிறார்கள்.

ஆனால் த.வெ.க என்ன செய்துகொண்டிருக்கிறது? ’மாணவர் போராட்டம் குறித்து ஏன் முதலமைச்சர் மௌனமாக இருக்கிறார்?’ என்று தொடர்ந்து கேள்விகள் எழுப்பப்பட்டபிறகு ஒப்புக்கு நாங்களும் ‘நீட்’டை எதிர்க்கிறோம் என்று ஒரு அறிக்கை வருகிறது. ஆனால் அந்த அறிக்கைக்குக் கூட அவர்கள் உண்மையாக இல்லை. தமிழ்நாட்டில் அமைதி வழியில் போராடும் மாணவர்கள்மேல் த.வெ.க அரசின் காவல்துறை கடும் வன்முறையை ஏவி வருகிறது. வகுப்பறைகளுக்குள் புகுந்து மாணவர்கள் கைது செய்யபடுகின்றனர். டெல்லியில் போராடும் மாணவர்கள் மேல் துணை ராணுவப்படையும் காவல்துறையும் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறதோ அதே வன்செயல்கள் தான் த.வெ.க அரசால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**கல்வி மோசடிக்கு எதிராக மாணவர்கள் எழுச்சிமிகு போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் போது ’ஜனநாயகன்’ படம் பார்ப்பதற்காக ஒட்டு மொத்த தலைமைச் செயலகத்திற்கும் அறிவிக்கப்படாத விடுமுறை விடப்படுகிறது. முதலமைச்சர் தனது படத்தைப் போய் பார்த்தால் அது ஒரு பெரிய செய்தி. அமைச்சர்கள் ஊர் ஊராய் போய் படம் பார்த்து அழுதால் அது ஒரு பெரிய செய்தி. துக்க காரியம் நடந்துவிட்டதுபோல அப்படி அழுகிறார்கள். கரூர் மரணங்களுக்காக ஒரு சொட்டு கண்ணீர் விடாத கண்களெல்லாம் ஜனநாயகனுக்காக அழுகிறார்கள். உண்மையில் தமிழ்நாட்டில் ஜனநாயகம் செத்துவிட்டதற்காக விஜய்க்கு வாக்களித்தவர்கள்தான் அழவேண்டும்.**



**மனுஷ்ய புத்திரன்,**
மாநில ஆலோசகர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

அமைச்சர்களின் நீலிக் கண்ணீர் ஒரு புறம் என்றால் திரையரங்குகளில் ஜனநாயகன் படம் பார்த்து குத்தாட்டம் போடும் விஜய் ரசிகர்கள் இன்னொரு புறம். அதுவும் சமூக வலை தளங்களில் வேகமாகப் பரப்பப்படுகிறது.

ஒரு புறம் டெல்லியில் போராடும் மாணவர்களின் காணொலியையும் இன்னொரு புறம் ஜனநாயகனுக்காக குத்தாட்டம்போடும் விஜய் ரசிகர்களின் காணொலிகளையும் ஒப்பிட்டுக் காட்டி “தமிழ்நாடு எவ்வாறு சீரழிந்துவிட்டது” என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன. தமிழ்நாட்டிலும் இளைஞர்கள் போராடி வரும் சூழலில் இந்த விமர்சனம் முழு உண்மை இல்லை என்றாலும் த.வெ.க உருவாக்கும் அரசியல் பண்பாட்டுச் சீரழிவு தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு தலைக்குனிவையே ஏற்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டு இளைஞர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஈழத் தமிழர்களுக்கான போராட்டம், ஜல்லிக்கட்டுப் போராட்டம், சுற்றுச் சூழல் சார்ந்த பிரச்சினைகளுக்கான போராட்டம் என எத்தனையோ போராட்டங்களில் முன்னணியில் இருந்திருக்கிறார்கள். வட இந்தியாவைவிட தமிழ்நாடு அரசியல் விழிப்புணர்ச்சி பெற்ற மாநிலம் என்ற நற்பெயர் நமக்கு இருந்திருக்கிறது. ஆனால் அந்தப் பெயரை அழித்தொழித்து கேளிக்கை அரசியலையே தன் வழிமுறையாகக் கொண்டிருக்கிறார் விஜய். விஜய்யின் கூட்டங்களில் அவரது போலி அரசியல் பேச்சுகளாலும் சினிமா பிம்பத்தாலும் மதிமயங்கிய ரசிகர்கள் கட்டுப்பாடற்று நடந்துகொண்ட காட்சிகள் தமிழர்களைப்பற்றிய மிக மோசமான பிம்பத்தை தேசிய அளவில் உருவாக்கின. அத்தகைய போலிப் பேச்சுகளையே முதலமைச்சரான பிறகும் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறார். இதில் விஜய் அதைச் செய்தார் இதைச் செய்தார் என பரப்பப்படும் போலிச் செய்திகள் தேசிய அளவில் பெரும் கேலிப்பொருளாகியிருக்கின்றன.

**விஜய் இளைஞர்களை அரசியல் படுத்தினார் என்று சில அறிவிலிகள் கூசாமல் எழுதினார்கள். இல்லை, இயல்பாகவே அரசியல் உணர்வும் சமூக உணர்வும் கொண்ட இளைஞர்களை விஜய் அரசியல் நீக்கம் செய்தார் என்பதுதான் உண்மை. விஜய் ரசிகர்கள் தமிழ்நாட்டின் நலன், அல்லது இளைஞர்களின் நலன் சார்ந்த எந்தப் போராட்டத்திலாவது ஈடுபடுத்தப்பட்டதுண்டா? ஒன்றிய அரசின் தமிழ்நாட்டிற்கு எதிரான அநீதிகளின் ஒன்றையேனும் எதிர்த்து விஜய் துணிவாகப் பேசியதுண்டா? விஜய்யை பின் தொடர்ந்த ரசிகர்கள் அவரது கேளிக்கை அரசியலுக்கு பலியானார்களே ஒழிய உண்மையான அரசியல் என்னவென்று அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்கள் அரசியலற்று சீரழிக்கப்பட்டார்கள். மடைமாற்றப்பட்டார்கள்.**




ஒரு மிகப்பெரிய இளைஞர் எழுச்சி நாடு முழுக்க நடந்துகொண்டிருக்கும்போது எற்கனவே இணையத்தில் ஒண்ணே கால் கோடிப் பேர் பார்த்துவிட்ட ஜனநாயகனை ரிலீஸ் செய்கிறார்கள். அதை ஒரு அரசு விழா போல மாற்றுகிறார்கள். எங்கும் கேளிக்கைகள் அரங்கேற்றப்படுகின்றன. காவல்துறை பாதுகாப்புடன் ஜனநாயகன் படக் காட்சிகள் நடக்கின்றன. ஏன் படத்தை வெளியிட இவ்வளவு நாள் பொறுத்தவர்கள் இந்தப் போராட்டம் முடியும்வரை சில நாட்கள் பொறுக்க மாட்டார்களா? அவர்களின் நோக்கமே இந்தப் போராட்டத்திலிருந்து ஒரு பகுதி இளைஞர்களைத் திசை திருப்பவேண்டும் என்பதுதான்.

**தமிழ்நாட்டின் சமூக நீதி சார்ந்த இளைஞர் அரசியலை சிதைத்து திசை திருப்ப உருவாக்கப்பட்ட ஒரு சக்திதான் த.வெ.க. வெளியே மாணவர்கள் காவல்துறையிடம் அடிவாங்கி போராடிக் கொண்டிருக்கும்போது இளைஞர்களின் அரசியல் நாயகனாக போலியாக பட்டம் சூட்டப்பட்ட விஜய்யின் ரசிகர்கள் திரையங்குகளுக்குள் தங்கள் கேளிக்கைகளை அரங்கேற்றிக்கொண்டிருந்தார்கள். இதுதான் விஜய் கொண்டு வந்த மாற்றம்.**

இளைஞர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த விஜய்யின் காவல்துறை இன்று அந்த இளைஞர்களின் உரிமைகளுக்காக போராடும் இளைஞர்கள்மீது கடும் அடக்குமுறைகளை ஏவிக்கொண்டிருக்கிறது. விஜய்யின் போலிப் புரட்சி இன்று அம்பலமாகிக்கொண்டிருக்கிறது.

விஜய்யின் போலிப் புரட்சியை ஜென் ஸீ புரட்சி என கதை கட்டியவர்கள் இன்று மாணவர்கள் போராட்டத்தின் உண்மையான ஜென் ஸீ புரட்சியைக்கண்டு செய்வதறியாமல் திகைத்து நிற்கிறார்கள். த.வெ.கவின் அவதூறு அரசியல் கேளிக்கை ‘ரீல்’கள் குப்பைக் கூடைக்கு அனுப்பப்பட்டு இன்று மாணவர் போராட்டக் காணொலிகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. த.வெ.க விர்ச்சுவல் வாரியர்ஸ் அம்பலப்பட்டு வெறும் கோமாளிகளாக மக்கள் முன் காட்சியளிக்கிறார்கள்.

விஜய்யின் கேளிக்கை அரசியல் பாதையை விட்டு விலகி உரிமைப்போராட்ட அரசியலுக்கு விஜய்யைப் பின்பற்றும் இளைஞர்கள் திரும்பும் நாள் வெகுதொலைவில் இல்லை. **திரையில் வில்லனாகத் தோன்றிய பிரகாஷ் ராஜ் போன்ற நடிகர்கள் மாணவர் போராட்டத்தின் நாயகர்களாக மாறியிருக்கிறார்கள். ஆனால் திரையில் நாயகனாக நடித்த விஜய் ஆட்சியதிகாரத்தில் இளைஞர்களின் வில்லனாக மாறியிருக்கிறார்.** தங்கள் உரிமைகளுக்காக போராட்டக் களத்திற்கு போக வேண்டிய இளைஞர்களை தனது படத்தைப் பார்க்க தியேட்டருக்குள் நிறுத்தி வைத்திருக்கிறார்.

---

### ‘பாலுக்கும் காவல் – பூனைக்கும் தோழன்’ என்பதுபோல்

## பா.ஜ.க.வுக்கும், காங்கிரசுக்கும் விசுவாசம் காட்டி தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது த.வெ.க. அரசு!


### முன்னாள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு காட்டம்!

*நெல்லை, ஜூலை 26-*

*முன்னாள் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.*

*இந்தியாவில் ஒன்றிய அரசின் மருத்துவ நிறுவனங்களில் நீட் போன்ற தேர்வு நடைபெறுவதை எந்த மாநில அரசும் எதிர்ப்பதில்லை, அதுபோல் மாநில அரசுகளின் மாநில வரிப்பணத்தில் உருவாக்கி இருக்கும் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ சேர்க்கைக்கு நீட் தேர்வு ரத்து செய்ய வேண்டும் என்பதை மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் முதல் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரை தொடர்ந்து 10 ஆண்டு காலமாக எதிர்ப்பதோடு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் நீட் தேவையில்லை என இரண்டு முறை ஏகமனதாக மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைத்த பெருமை முன்னாள் முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு.*

*இந்த உண்மையைப் புரிந்து கொண்ட இந்திய இளைஞர்கள் நீட் தேர்வுக்கு எதிராக டெல்லியில் அறவழியில் போராடி வருவதையும், ஒன்றிய அரசு காட்டுமிராண்டித்தனமாக அடக்கி, ஒடுக்குவதையும், த.வெ.க. அரசு கைகட்டி வேடிக்கை பார்ப்பது ஏன் CMsir?*



*தமிழ்நாட்டில்,டெல்லி நீட் போராட்டத்திற்கு ஆதரவு மாணவர்கள், இளைஞர்களை கொடூரமாக அடக்கி, ஒடுக்கி கைது செய்வது ஏன்? அவர்களை மெரினாவில் போராட அனுமதிக்காதது ஏன்? பா.ஜ.க. ஆட்சிக்கு காட்டும் விசுவாசமா?*

*இன்று இந்திய இளைஞர்கள் ஒன்றிய அரசின் அடக்குமுறையை தாங்கி பலநாள் உணவு, உறக்கமின்றி,உயிரை பணயம் வைத்து ஜனநாயக முறையில் போராடி வருவதை தமிழ்நாட்டில் கண்டு கொள்ளாத த.வெ.க.அரசு இந்திய ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து கொண்டாடி மகிழ்வது வெட்கக்கேடானது.*

*“ஜனநாயகன்” பட வசூலுக்காக கர்நாடக அரசு நமக்கு தர வேண்டிய தண்ணீரை கேட்டுப் பெறாமல் மேகதாதுவில் அணை கட்டுவதை தடுக்க துணிவு இல்லாமலும் தமிழ்நாட்டு மக்களுக்கு தொடர்ந்து நம்பிக்கை துரோகம் செய்வதுதான் வாக்களித்த மக்களுக்கு தங்கள் காட்டும் பிரதிபலனா?*

*தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி “பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்”என்பது போல் காங்கிரசுக்கும், பா.ஜ.க.வுக்கும் விசுவாசம் காட்டுவதற்காக தமிழ்நாடு மக்களை வஞ்சிப்பது தான் ஜனநாயகமா CMsir?*

*இவ்வாறு அவர் கூறியுள்ளார்.*

---

### சிறையில் இளைஞரை கொடூரமாக அடித்துக் கொலை செய்த சம்பவம்:

## போலீசார் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்!

### குற்றவியல் நீதித்துறை நடுவரிடம், உயிரிழந்த அருணாச்சலத்தின் தாயார் புகார் மனு!

*தூத்துக்குடி, ஜூலை 26-*

*தூத்துக்குடியில் விசாரணைக்காக அழைத்துச் சென்று, தனது மகனை அடித்து கொன்ற காவல் துறையினர் மீது, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குற்றவியல் நீதித்துறை நடுவரிடம், உயிரிழந்த அருணாச்சலத்தின் தாயார் புகார் மனு அளித்தார்.*

*தூத்துக்குடியைச் சேர்ந்த அருணாச்சலம் என்ற இளைஞரை விசாரணைக்காக அழைத்துச் சென்று போலீசார் அடித்து துன்புறுத்தியதில் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்த வாக்குமூலம் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், காவல்துறையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் வரை அருணாச்சலத்தின் உடலை வாங்க மாட்டோம் என உறவினர்கள் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பிரேத பரிசோதனை கூட்டத்தில், சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்ற இளைஞர் அருணாச்சலத்தின் உடற்கூராய்வு நிறைவு பெற்று உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அருணாச்சலத்தின் குடும்பத்தினரிடம் குற்றவியல் நீதித்துறை நடுவர் விசாரணை மேற்கொண்டார். அப்போது, உயிரிழந்த அருணாச்சலத்தின் தாயார் புகார் மனு அளித்தார். அதில் தனது மகன் அருணாச்சலத்தை கைது செய்து துன்புறுத்திய உதவி ஆய்வாளர் உள்ளிட்ட மூன்று காவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.*

**5 வாரத்தில் 4 காவல் மரணங்கள்!**

*த.வெ.க. ஆட்சியில் கடந்த 5 வாரங்களில் 4 காவல்நிலைய மரணங்கள் அரங்கேறியுள்ளபோதும், காவல்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள முதலமைச்சர் விஜய் இதுகுறித்து வாய்திறக்காதது ஏன் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.*

*சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு காவல்நிலைய மரணங்கள் குறித்து விஜய் பல விமர்சனங்களை எழுப்பிய நிலையில், அவர் தலைமையில் தமிழ்நாட்டில் ஆட்சி அமைந்தபிறகு, 5 வாரங்களில் 4 காவல்நிலைய மரணங்கள் அரங்கேறியுள்ளன.*

*கடந்த ஜூன் 8ம் தேதி சென்னையில் வெங்கடேசன் என்பவரும், ஜூலை 13ம் தேதி நாகர்கோவிலில் சபரிவர்மன் என்பவரும் காவலர்கள் தாக்கியதில் மரணம் அடைந்தனர். அதனைத்தொடர்ந்து, ஜூலை மாதம் 15ம் தேதி பாலாஜி, தற்போது தூத்துக்குடி அருணாச்சலம் என 4 காவல்நிலைய மரணங்கள் நிகழ்ந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த காவல்நிலைய மரணங்கள் குறித்து, காவல்துறையை தனது கையில் வைத்துள்ள முதலமைச்சர் விஜய் இதுவரை வாய்திறக்கவில்லை. விஜய்யின் இந்த செயலுக்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.*

---

### நீட் எதிர்ப்பு:

## டைனோசர்களாக பரவத் தொடங்கிய கரப்பான் பூச்சிகள்!



**கரப்பான்பூச்சிதானே**
**என்று நினைத்தான்**
**இருளில் மறைந்து திரியும்**
**அதன் மீது**
**அவனுக்கோர் அலட்சியம் இருந்தது**

**திடீரென**
**அதைப் பகலில் பார்த்தது**
**பதற்றமானது**

**அங்கும் இங்குமாக**
**அலைந்த ஒன்று**
**நூறு**
**ஆயிரம்**
**இலட்சமாக**
**சமையலறை**
**குளியலறை**
**படுக்கையறை**
**எல்லாவற்றையும்**
**முற்றுகையிட்டன**

**அவனால்**
**தப்பிக்க இயலவில்லை**

**அவற்றின்**
**உணர்கொம்புகளின் அசைவுகள்**
**அவனுக்கு**
**அச்சத்தை உண்டாக்கின**

**எதை வேண்டுமானாலும்**
**உண்டு செரிக்கும்**
**இராட்சதப் பசியுடன்**
**அவை**
**திசைகளை விழுங்கியபடி**
**டைனோசர்களாக**
**பரவத் தொடங்கிவிட்டன**

**கரப்பான்பூச்சிதானே என்று**
**அவனால்**
**அலட்சியமாக இருக்க முடியவில்லை**



**கவிஞர் பழநிபாரதி**